பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 08 2026** **SATURDAY** **6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** **140** கோடி மக்களின் ஒத்துழைப்புடன் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க சுதந்திர திருநாளில் உறுதியேற்போம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** மத்திய அரசுடன் இணக்கமான உறவை பராமரித்து தமிழக மக்களுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

**3)** மாவட்ட தலைநகரங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் சுதந்திர தினத்தையொட்டி தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

**4)** தமிழகத்தின் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபை கூட்டம் இன்று நடைபெற்றது.

**5)** உலகக் கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா **3-1** என்ற கோல் கணக்கில் வேல்ஸ் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

**140** கோடி நாட்டு மக்களின் கடின உழைப்புடன் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை **2047**-ஆம் ஆண்டில் எட்டிவிடுவோம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தில்லி செங்கோட்டையில் நாட்டின் **80**-ஆவது சுதந்திர தினத்தையொட்டி, தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரையாற்றிய பிரதமர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உறுதியை இந்நாளில் ஏற்போம் என்று கூறினார்.

கடந்த **12** ஆண்டுகளில் மக்களின் அதிகாரத்தை உறுதி செய்து பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதாக கூறிய பிரதமர், **25** கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக்கோட்டிலிருந்து மீண்டுள்ளதாக தெரிவித்தார்.

உலக அரங்கில் நாட்டை உச்சத்திற்கு கொண்டு செல்ல ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பும் அவசியமானது என்றும் பிரதமர் கூறினார்.

பல்வேறு துறைகளில் நாடு பெற்றுள்ள வளர்ச்சியை பட்டியலிட்ட பிரதமர், மின்னணு தொழில்துறை உற்பத்தி **7** மடங்கும், ரயில்பெட்டி உற்பத்தி **21** மடங்கும், செல்போன் உற்பத்தி **33** மடங்கும் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

மக்களின் தேவைக்கு வெளிநாட்டு இறக்குமதியை நம்பியிராமல், உள்நாட்டு உற்பத்திக்கு உத்வேகம் அளித்து பல துறைகளில் சுயசார்பு நிலையை எட்டியிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

வேகமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பம், சுயசார்பை எட்டும் முயற்சிக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதற்கான தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் 100 கிகாவாட் திறன் கொண்ட ஐந்து புதிய அணுஉலைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அணுசக்தி தொழில்நுட்பத்திலும் சுயசார்பை எட்டுவதற்கான பெரிய அளவிலான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மாற்று எரிசக்தித் திட்டங்களை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளும் கடந்த 12 ஆண்டுகளில் திறம்பட மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் மூலம், நடுத்தர மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் வீடுகளுக்கான சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டத்தின்மூலம், 50 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அரசின் மானிய உதவியுடன் தங்களுக்கான மின் உற்பத்தியை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்மூலம் மின்சார செலவு முற்றிலுமாக தவிர்க்கப்பட்டிருப்பதாகவும், கூடுதல் மின்சாரத்தை விற்பனை செய்வதன் மூலம் கணிசமான வருவாயை மக்கள் ஈட்டி வருவதாகவும் பிரதமர் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் நாட்டின் 80-ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

சென்னை ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் திரு விஜய் தேசியக்கொடியை ஏற்றிவைத்து சுதந்திர தின உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், 2036-ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தின் பொருளாதாரத்தை ஒன்று புள்ளி ஐந்து ட்ரில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்த மாநில அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார்.

மாநிலத்தில் உள்ள எட்டு கோடி மக்களுக்குமான சமூக நீதியையும், சமத்துவத்தையும் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசுடன் சுமூகமான உறவை கடைபிடித்து மக்களுக்கான திட்டங்களை மாநில அரசு நிறைவேற்றும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் ஊழலுக்கு இடமளிப்பதில்லை என்ற கொள்கையில் மாநில அரசு உறுதியுடன் செயல்படும் என்றும் திரு விஜய் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் **80-**ஆவது சுதந்திர தினத்தையொட்டி தேசியக்கொடி ஏற்றப்பட்டு, வந்தே மாதரம் தேசிய பாடலும், தேசிய கீதமும் பாடப்பட்டன.

மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட ஆட்சியர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்தனர்.

செங்கல்பட்டில் மாவட்ட ஆட்சியர் திரு வீரப்பன் மூவர்ண கொடியை ஏற்றிவைத்தார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் உயரதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில், மூவர்ண பலூன்கள் மற்றும் சமாதான புறாக்களும் பறக்கவிடப்பட்டன.

திருவள்ளூரில் மாவட்ட ஆட்சியர் கவிதா தேசியக்கொடியை ஏற்றிவைத்து 4 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

சுதந்திரப் போராட்ட தியாகிகள் குடும்பத்தினருக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

காஞ்சிபுரத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி சினேகா தேசியக்கொடியை ஏற்றிவைத்து, 93 பயனாளிகளுக்கு ஒரு கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

<<<<<<>>>>>>

சுதந்திர தினத்தையொட்டி, தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் இன்று கிராமசபை கூட்டங்கள் நடைபெற்றன.

நாமக்கல் மாவட்டம் மாரப்பன்நாயக்கன்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திரு மதுபாலன் கலந்துகொண்டார்.

கிராமப்புற மக்கள் அரசின் திட்டங்கள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கிராமங்கள் முக்கிய பங்களிப்பை ஆற்றி வருவதாக கூறிய அவர், மக்களின்

ஒத்துழைப்போடு கிராமங்களை மேம்படுத்த அரசு நிர்வாகம் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

ஊரகப்பகுதிகளை தூய்மையாக பராமரிக்க மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் திரு மதுபாலன் கேட்டுக்கொண்டார்.

நாமக்கல் மாவட்டத்தில் 310 கிராம ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் நடைபெறுவதாக அவர் தெரிவித்தார்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 201 கிராம ஊராட்சிகளில் சுதந்திர தின சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

இம்மாவட்டத்தில் உள்ள மணகதி ஊராட்சியில் நடைபெற்ற கிராமச்சபை கூட்டத்தில், ஆட்சியர் திருமதி மிருணாளினி மற்றும் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மக்களின் தேவைகளை கேட்டறிந்த மாவட்ட ஆட்சியர், அவர்கள் அளித்த மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.

இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கிராமப்புற மக்களுக்கு தேவையான வசதிகளையும், வாழ்வாதாரத்தையும் செய்து தர வேண்டும் என்பதில் அரசு நிர்வாகம் முனைப்புடன் செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

அரசின் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர் திருமதி மிருணாளினி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

சுதந்திர தினத்தையொட்டி பெரம்பூர் ரயில்வே மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தெற்கு ரயில்வேயின் பொது மேலாளர் திரு சுப்பாராவ் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

நாட்டை ஒருங்கிணைப்பதில் ரயில்வேயின் பங்கு இன்றியமையாதது என்று அவர் கூறினார்.

சென்னை ரயில்வே கோட்டம் சார்பில், கோட்ட மேலாளர் திரு சைலேந்திர சிங், சென்னையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பின்னர் உரையாற்றிய அவர், பயணிகளின் பாதுகாப்புக்கும், குறித்த நேரத்தில் ரயில்களை இயக்குவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படுவதாக தெரிவித்தார்.

சென்னை ரயில்வே கோட்டத்தில் நாள்தோறும் 12 லட்சம் பயணிகள் ரயிலில் பயணித்து வருவதாக அவர் கூறினார்.

நடப்பு நிதியாண்டில் கடந்த மாதம் 31-ஆம் தேதிவரை ரயில் நிலையங்களில் காணாமல் போன 163 சிறுவர்கள் ரயில்வே பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக திரு சைலேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 2026 — 27-ஆம் ஆண்டு கலந்தாய்வுக்கான கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், மாணவர்களின் நலன்கருதி தொழிற்பயிற்சி நிலையங்களில் நேரடி மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 31-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வடகடலோர பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 47 Sec.)***

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**உலகக் கோப்பை ஹாக்கிப்போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா - வேல்ஸ் அணியை வென்றது.**

**நெதர்லாந்தின் Amstelveen-ல் நடைபெற்ற இப்போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் இந்தியா வெற்றிபெற்றது.**

**-----------------**

**தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கோவை — திருச்சி அணியை எதிர்கொள்கிறது.**

**திண்டுக்கல்லில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.**

**<<<<<<END>>>>>>**